அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 10

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

அது ஓர் அழகான மாலை நேரத்து மழைநாள். காற்று வேகமாக வீசத்தொடங்கியது. வீட்டின் பின்புறமிருந்த பழமரங்கள் காற்றுடன் சண்டையிடுவது போலத் தோன்றியது. இதனைக் கவனித்தவாறு சாளரத்தினூடு வெளியே பார்த்தேன். வானம் இருண்டு கருமுகில் சூழ்ந்து காணப்பட்டது. வேகமாக வீசிக்கொண்டிருந்த காற்றின் வெறிச்செயலால் மரங்கள் சுற்றிச் சுழன்று ஆடிக்கொண்டிருந்தன. சிறிய மரக்கிளைகள் காற்றின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க இயலாது முறிந்து விழத்தொடங்கின. காற்றின் வேகம் குறையவே இல்லை. இடிமுழங்கியது. கருமேகத்தில் பெரிய ஒளிக்கோடாக மின்னல் மின்னியது.

மெதுவாகத் தூறத்தொடங்கிய மழை திடீரென சோவெனப் பொழியத் தொடங்கியது. தரையிலே வெள்ளம் தேங்காது வேலியோரமாக வடிந்தோடிக் கொண்டிருந்தது. மழையினதும் காற்றினதும் இரைச்சல் ஒலி மெல்லமெல்லக் குறைய ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் மழை நின்றுவிட்டது. மரங்கள் மழைநீரில் சிலிர்த்து நின்றன. பூச்செடிகளின் இலைகளில் மழைநீர்த்துளிகள் அழகுக்கு அழகு சேர்துக்கொண்டன. நானும் எனது அம்மாவும் மழைக்கு முறிந்த மரக்கிளைகளை எடுத்து ஓரிடத்தில் அடுக்கி வைத்தோம். சரிந்தும் முறிந்தும் விழுந்தும் காணப்பட்ட பூச்செடிகளுக்கான பாதுகாப்பையும் செய்தோம்.